**தமிழ் நாடு அரசு**

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் நலம் - கல்வி - ஆதிதிராவிடர் நலத் துறை மாணவ / மாணவியர்களின் விடுதிகளுக்கு நாளேடுகள் வழங்குதல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 4) துறை**

அரசு ஆணை (நிலை) எண் 200
நாள் 22.09.2003

படிக்கவும் :

1. அரசு ஆணை (நிலை) எண் 93, ஆதி(ம)பந துறை, நாள் 13.5.97
2. அரசு கடிதம் (நிலை) எண் 54, ஆதி(ம)பந துறை, நாள் 20.3.2003

மீண்டும் படிக்கவும் :

ஆதிதிராவிடர் நல இயக்குநர் கடிதம் எண் த1/40764/02 நாள் 29.4.2003.

ஆணை :

தற்போது ஆதிதிராவிடர் நலத் துறையின் கீழ் இயங்கி வரும் 1076 நல விடுதிகளுக்கு இரண்டு நாளிதழ்கள் மட்டும் வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால் பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை விடுதிகளில் மூன்று நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன. எனவே ஆதிதிராவிடர் நலத் துறை விடுதிகளுக்கும் மூன்று நாளிதழ்கள் வழங்குவது பற்றி அரசு பரிசீலனை செய்தது. இதற்கிடையில், மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்கள் சட்டப்பேரவையில் 22.4.2003 அன்று மானியக் கோரிக்கை விவாதத்தின் போது

“அனைத்து 1076 ஆதிதிராவிடர் நலத் துறை விடுதிகளுக்கும் தற்போது ஒரு ஆங்கிலம் மற்றும் ஒரு தமிழ் நாளேடுகள் வழங்கப்பட்டு வருகிறது. இனி கூடுதலாக இவ்விடுதிகளுக்கு ஒரு தமிழ் நாளேடு வழங்கப்படும்”, என புதிய அறிவிப்பைச் செய்தார்.

2. மேற்கண்ட அறிவிப்பு குறித்து ஆதிதிராவிடர் நல இயக்குநருடன் கலந்தாலோசிக்கப்பட்டது. ஆழ்ந்த ஆய்வுக்கு பின்பு, ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு (i) தினத்தந்தி (ii) மக்கள் குரல் மற்றும் (iii) நமது எம்.ஜி.ஆர். ஆகிய மூன்று தமிழ் நாளிதழ்களையோ (அல்லது) ஆங்கில நாளிதழ் வாங்க வேண்டிய இடங்களில் நமது எம்.ஜி.ஆர். மக்கள் குரல் ஆகிய இரு தமிழ் நாளிதழ்களோடு இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழையும் சேர்த்து மூன்று நாளிதழ்களை வழங்க அரசு ஆணையிடுகிறது. கூடுதலாக வழங்கப்படும் ஒரு நாளிதழ்களுக்கு ஏற்கனவே உள்ள நிதி ஒதுக்கீட்டுக்கும் கூடுதலாக ரூபாய் 9,68,400/- க்கு (ரூபாய் ஒன்பது இலட்சத்தி அருபத்தி எட்டாயிரத்து நானூறு மட்டும்) (ரூ.90 வீதம் X 1076 விடுதிகள் X 10 மாதம் = ரூபாய் 9,68,400/-) ஒப்பளிப்பு செய்தும் அரசு மேலும் ஆணையிடுகிறது.

3. மேற்கண்ட கூடுதல் செலவினம் கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும் :

“2225 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 01, ஆதிதிராவிடர் நலன் - 277 கல்வி - I - திட்டத்தில் சேராதது - AE மாணவர் இல்லங்கள் - 05 - அலுவலக செலவினம் - 02 சில்லரை செலவினம் (த.தொ.கு.எண் 2225-01 227 AE 0529).

4. பத்தி 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள செலவினத்தை “புது துணைப் பணித்திட்டமாக (New Instrument of Service)” செயல்படுத்தப்பட வேண்டும். நாளடைவில் இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்ற பேரவையில் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதலில் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாகப் பெற்று மேற்கொளள்ளப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொ.ஐ)த் துறையால் தனியாக வெளியிடப்படும். சம்பந்தப்பட்டத் துறைத் தலைவரை எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் பெறுவதற்கு உரிய படிவத்தில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்வதுடன், 2003-2004-ம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் (Supplementary Estimates) இச்செலவினத்தை சேர்ப்பதற்கு உரிய நடவடிக்கையினை உரிய நேரத்தில் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இந்த ஆணை நிதித் துறையின் இசைவுடன் (அசாகு.எண் 51318/நிதி(சந)/03, நாள் 18.09.2003) வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 483.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப. செல்வம்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

இயக்குநர், ஆதிதிராவிடர் நலத் துறை, சென்னை 5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்
மாநில கணக்காயர், சென்னை 18 / சென்னை 35
அனைத்து மாவட்ட கருவூல அதிகாரிகள்
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை 5 / சென்னை 9 / சென்னை 79

நகல்

நிதித் துறை (SW / WM / BG I / BG II) சென்னை 9
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை 9
முதலமைச்சர் அலுவலகம், சென்னை 9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (ஆதிந 8) துறை, சென்னை 9

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.